# பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு

திருவழிபாடு ஆண்டு - A

2020-09-27

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 5: 1-,
திருப்பாடல் 80: 8,11. 12-13. 14-15. 18-19,
திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4: 6-9,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 21: 33-43

## திருப்பலி முன்னுரை:

இறைஇயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்! பொதுக்காலத்தின் 27ஆம் ஞாயிறுத் திருப்பலியில் பங்கேற்க வந்துள்ள இறைமக்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம்.

நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகியவை, கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள, நமது உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாப்பதோடு, அறி வெல்லாம் கடந்த இறை அமைதி நமக்கு நிறைவாழ்வைத் தரும், அப்போது அமை தியை அருளும் கடவுள் நம்மோடு இருப்பார் என்பதே இன்று நாம் பெற்றுக் கொள் ளும் செய்தியாகும். அத்தோடு இறைவன் வெளிப்படுத்தும் விசுவாச உண்மை களை நேர்மையோடு விசுவசித்து ஏற்றுக் கொண்டு வாழாவிட்டால் ஏற்படுக் கூடிய தீமை பற்றியும் நமக்கு எடுத்துக் கூறப்படுகின்றது.

எனவே விவேகத்தோடு செயற்பட்டு: உண்மையானவை எவையோ, கண்ணியமா னவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடை யவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்திக்கொண்டு, திருத்தூதர்கள் வழியாய்க் கற்றுக்கொண்டவை, பெற்றுக் கொண்டவை, கேட்டறிந்தவை, அவர்கள் வாழ்வில் நாம் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்பிடித்து, தீமையின் பிடியிலிருந்து தப்பித்து வாழ இத் திருப்பலியில் வரம் கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
உம் திருஅவை உள்ள அனைத்து தரப்பினரும் எதையும் எதிர்பார்க்காத இயேசுகிறிஸ்துவின் மனநிலையைக் கொண்டு தங்கள் வாழ்விலும், ஏற்றப் பணிகளிலும் சிறந்த விளங்க தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகிய நாங்கள் உம்மைப் புறக்கணித்து, நன்றியற்ற வகையில் வாழ்வதற்காக வருந்துகிறோம். மன்னியும். அன்றாடம் நீர் தரும் செய்திகளை, அழைப்புகளை ஏற்று செவிசாய்த்து வாழ உமது ஞானத்தைத் தந:தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விண்ணுலகினின்று கண்ணோக்கிப் பார்க்கும் தந்தையே இறைவா!**
உமது பிள் ளைகளாகிய நாம்: உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற் றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்திக்கொண்டு வாழுவத ற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலமும் வளமும் தந்தருளும் எம் இறைவா!**
எங்கள் மாணவசெல்வங்கள் அனைவரும் இந்த தொற்று நோய்காலத்தில் பள்ளிக்கு சென்று கல்வி பயிலும் முறையின்றி கூண்டுக்குள் அடைப்பட பறவை போல தத்தளிக்கும் மனநிலையிலிருந்து விடுபடவும், அதற்கு ஏற்றநிலையை விரைவில் உருவாக தேவையான ஞானத்தையும், சக்திகளையும் அனைவரும் பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**பரிவுள்ளம் உடையவரான தந்தையே இறைவா!**
ஒவ்வொரு நாளும் உலகில் பெருகிவரும் வன்முறையின் வேர்களை அறுத்தெறிந்து, உலகில் அமைதி நிலவிடவும், உலகிற்கு நீர் கொடுத்துள்ள இயற்கை வளங்கள் அனைத்தும், பொறுப்பிலுள்ளோரால் சரியான முறையில் பகிரப்பட்டு, பராமரிக்கப்படவும் வேண்டிய மனப்பக்குவத்தையும் அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எம் குற்றங்களையும், குறைகளையும் நினையாத எம் இறைவா!**
எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் தத்தம் பணிகளை செவ்வனே செய்யவும், அதன்மூலம் தம் வாழ்வின் நிறைவை மகிழ்வாய் பெற்று உமது சாட்சிகளால் அனைவரையும் அன்புடனும் பாசத்துடனும் வாழ நடத்த தேவையான இரக்கத்தையும் பொறுமையையும் பெற்றிட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.